# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2020.12.21 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## புகையிலை வரி (திருத்தம்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

***1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தைத்***
***திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) விஜயதாஸ*
*ராஜபக்ஷ அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## புகையிலை வரி (திருத்தம்)

# 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின்                ஆம் இலக்க, புகையிலை வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவின் உப பிரிவு 15(1) ஐ நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

> "15. (1) இந்தச் சட்டத்தின்கீழ் மாஜிஸ்திரேட் ஒருவர் முன்னிலையில் சுருக்கமான விசாரணையின் பின்னர் குற்றமொன்றைப் புரிந்துள்ள வகையில் குற்றவாளியாகக் காணப்படும் ஒவ்வொரு நபரும் இந்தச் சட்டத்தின்கீழ் சுங்கத் திணைக்களத்தினால் அல்லது மதுவரித் திணைக்களத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதியின் மூன்று மடங்கான அபராதத் தொகை ஒன்றுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கான சிறைத் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.